1891 மே 6ஆ

திரு. பு. கோ. ஆனூர். ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டாண்டுகளுக்கு முன்பு சுமார் 4,50,000 ரூபாய் அளவிற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு பரிசீலனையில் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாண்டுக் காலமாகியும்கூட அந்த மதிப்பீடு நடைமுறைப்படுத்தப் படவில்லை. அந்த வேலை நடக்கவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது அதைத் துரிதப்படுத்திச் செயல்படுத்துகின்ற உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, விரைவிலே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

அகஸ் தீஸ்வரம், தோவாளை தாலுக்காக்களிலுள்ள குளங்கள்.

*வினா எண் 1004—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தோவாளை போன்ற தாலுக்காக்களில் 50 ஏக்கருக்கும் மேலாக விஸ்தீரணம் உள்ள குளங்கள் மண்ணால் நிறைந்து கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த குளங்களை வெட்டி ஆழப்படுத்தி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடியாக அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் உள்ள சில குளங்களில் தூர் சேர்ந்திருந்தாலும், எல்லாக் குளங்களும் வாய்க்கால்கள் மூலம் ஆற்று நீரைப் பெறுவதால் இக்குளங்களில் தண்ணீர் வருடத்தில் எல்லா மாதங்களிலும் இருக்கும் எனவும் அதனால் இக்குளங்களின் கீழுள்ள ஆயக்கட்டுகளில் பாசன வசதி பெறாத நிலங்கள் இல்லை எனவும், சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். ஆற்று நீரைப் பெறுகின்ற குளங்கள் ஆகையால், தூர் அகற்றி மேம்படுத்தும் பணிகளை எடுத்துக் கொள்வதற்கான விதிமுறைகளின் கீழ் வரவில்லை. எனினும் குளங்களை மராமத்து செய்யும் பணி மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள அனந்தனாறு பகுதிகள் முழுமையும் கடந்த இரண்டு முறை பயிர்கள் தண்ணீர் இன்றிக் கருகி விட்டன. சேனலில் தண்ணீர் வராத நேரத்தில் இந்தக் குளங்களில் தண்ணீர் இருந்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிராகும். ஆதலால் இந்தக் குளங்களை ஆழப்படுத்த அரசு வேகப் பணிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மராமத்துப் பணிகள் என்று வருகின்றபொழுது தூர் எடுப்பதைக்கூட நாம் சேர்த்துக் கொள்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே தூர் எடுத்து அந்த மண்ணைக் கொண்டுபோய்க் கடற்கரையிலேதான் கொட்ட வேண்டியிருக்கிறது. அதற்காகச் செலவு அதிகமாகும் என்ற கருத்து முன்பு தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது அரசினுடைய புதிய அறிவிப்பின்படி ஏரி குளங்களைத் தூர் எடுப்பதற்கு, கரையை உயர்த்துவதற்கு, ஒருடன் உற்பத்தி ஆவதற்கு 15,000 ரூபாய்வரை செலவானாலும் பரவாயில்லை என்று அரசு இன்றைக்குப் புதிய உத்தரவைப் போட்டிருப்பதனுடைய விளைவாக இந்தத் திட்டங்களெல்லாம் பொருளாதார ரீதியாகக் கட்டுப்படியாவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, இது குறித்து அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம் தடிக்காரக்கோணத்திற்கு அருகாமையில் கிடைக்கும் வைடூரியங்கள்

*வினா எண். 1005: திரு. டி. மணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் தடிக்காரக்கோணத்திற்கு அருகாமையில் வனப் பகுதியில் வைடூரியங்கள் எந்த அளவிற்கு கிடைக்கின்றன?

(ஆ) எந்த வருடத்திலிருந்து ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது?

(இ) இதன் விலை மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) மற்றும் (இ) * விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9—50]

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிற, என்னுடைய கேள்விக்கு ஆதாரமான, அடிப்படையான, பதில்கள் அதிலே இல்லை. குறிப்பாக, அது ஆரம்பித்தது எப்போது, எந்த அளவுக்கு அரசுக்கு அதிலே வருமானம் கிடைத்தது, அது எவ்வளவு இருக்கும் என்பது ஒன்று. இப்பொழுது தந்திருக்கிற குறிப்பிலே அது வீரப்புலி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தடிக்

* [450ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது].